# சிவகவினா



நெஞ்சில் கனலும்
இமை விளிம்பில் கண்ணீரும்
நேற்றோர் மலர்வனம்
எம்முன் இருந்தது
இன்றிங்கிருப்பதோ
எரிதணல் காடு



"சிவகவிநு நினைவில் சில"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
03.05.1994

மறைவு
21.04.2009

அமரர்.
செல்வி.கணேசலிங்கம் கவியார்த்திகா



தோற்றம்
27.08.1959

மறைவு
21.04.2009

அமரர்.
திரு.கந்தையா புவனேந்திரராசா (சிவா)
(பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர், கிளிநொச்சி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தப்பா வோடு சிறகடித்து போன எந்தன்
முத்தான கவின் குஞ்சே
பித்தாகி போனேன் உன் பிரிவாலே
செத்தாலும் எம் சிந்தையிலே நாம் மறவோம்
வித்தாகி விழுந்துதுறிந்து விருட்சங்களாய் வருவாய்
வைத்தேன் பாமாலை சூடியும் பாதங்கள்

## எந்தன் உடன் பிறப்பே

*எந்தன் உடன் பிறப்பே ஏகாந்தப் பெருவெளியே*
*உந்தன் உடன் பிறந்ததானால் உயர்படைந்தோம் இம் மண்ணில்*
*சிந்தனைச் சிப்பியென சிறகடித்தாய் இம் மண்ணில்*
*விந்தையென புகழ் படைத்தாய் வீரரென விளையாட்டில்*
*தந்தை தாய் பேணி தக்கபடி வாழ்ந்து வந்தாய்*
*சிந்தையுடன் எம்மூவரில் சிரத்தையுடன் பணிபுரிந்தாய்*
*முந்தயரைப் போல் நிமிர்ந்து முழுப்பணியும் செய்து வந்தாய்*
*எந்தப்பணியென்றாலும் ஏற்று முன் நின்றாய்*
*இன்றெம்மைத் தவிக்க விட்டு ஏனோடிப் போய் விட்டாய்*
*என் கையால் உங்களையே மணல் புதைத்து துடிக்க வைத்தாய்*
*அன்பொழுக அண்ணனென அழைத்தவாய் எங்கையடா*
*இன் பொழுக இதயத்தால் பாசம் பொழிந்தவனே*
*துன்பம் வாழ் நாளெல்லாம் தந்தேனோ பறந்து விட்டாய்*
*என்றெங்கே எப்பொழுது நாம் உன்னைக் காணுவது*
*என் கண்ணே எம்முன்னே என்றைய்யா வந்திடுவாய்*
*சின்னப்பொழுதுகளை சிரிப்பாக்கி வைத்தவனே*
*உன் பாதம் தன்னில் வைத்தோம் சமர்ப்பணங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

**அன்னை மடியில்**

27-08-1959



**அன்னியன் அழிப்பில்**

21-04-2009

## திரு. கந்தையா - புவனேந்திரராசா [சிவா]

(பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் கிளிநொச்சி)

நெடுந்தீவு வழித்தோன்றலும் கிளிநொச்சி உருத்திரபுரத்தை பிறப்பிடமாகவும் வலைஞர்மடத்தினை தற்காலிக முகவரியாகவும் கொண்ட புவனேந்திரராசா அவர்கள் 21-04-2009 அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார், கந்தையா பொன்னம்மா தம்பதியினரின் அருமைபுதல்வனும், வைத்திலிங்கம் நாகமுத்து தம்பதியினரின் அருமை மருமகனும் கோணேஸ்வரியின் பாசமிகு கணவரும், ரதீசியா, ரதீபன், ரதிபா, சங்கீர்த்தனா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னார், கணேசலிங்கம் (விவசாயபோதனாசிரியர்), பிரியசாந்தா, விக்கினேஸ்வரன்(கிருபா-கனடா), மகேஸ்வரன்(பிரான்ஸ்), குககுமாரராசா (ப.நோ.கூ.சங்க முகாமையாளர்), பிரபாகரன்(பிரபா)ஆகியோரின் அன்புச்சகோதரரும், மகேந்திரராசா(மின் பொறியியலாளர்), குகராசா(மணியம்-கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க தலைவர்), காலஞ்சென்ற அரியராசா, பரமராசா(கனடா), சாந்தினிதேவி, கலாதேவி, தர்மநாயகம்(இ.போ.ச), பவானி (கனடா), யோகநந்தினி(பிரான்ஸ்) வித்தியகுமாரி, தயாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யதார்த்திகா, பிரார்த்தன், கவியார்த்திகா, நிரார்த்தன் ஆகியோரின் சித்தப்பாவும் சுரேஸ், ரமேஸ், பிரியா, வித்தியா ஆகியோரின் மாமனாரும், மலரவன், துஷானி, பிரவீன், அட்ஷரா, அஷானா, ஆதித்தன்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவகாணி, லட்சியன ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக வேண்டிநிற்குமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மேலதிக தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| சகோதரன் - கிருபா - கனடா | 001 4166612968 |
| மைத்துனர் - அப்பன் - கனடா | 001 4162924301 |
| மருமகன் - சுரேஸ் - கனடா | 001 4168778826 |
| சகோதரன் - மகேஸ் - பிரான்ஸ் | 0033 130750703 |

# மரண அறிவித்தல்

பிறப்பு
03.05.1994



இறப்பு
21.04.2009

## செல்வி. கணேசலிங்கம் - கவியார்த்திகா

கிளிநொச்சி உருத்திரபுரத்தை பிறப்பிடமாகவும், வலைஞர் மடத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கணேசலிங்கம் கவியார்த்திகா அவர்கள் 21-04-09 அன்று அகாலமரணம் அடைந்தார்.

http://www.lankasrinotice.com/2009/04/23123006/ 4/28/2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் கணேசலிங்கம் கலாதேவி அவர்களின் அருமைமகளும், யதார்த்திகா, பிரார்த்தன், நிரார்த்தன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற சாம்பசிவம், இராஜேஸ்வரி, கந்தையா, பென்னம்மா ஆகியோரின் ஆருயிர் பேத்தியும் ஆவார்.

அன்னார், காலஞ்சென்ற புவனேந்திரராசா, விக்கினேஸ்வரன்(கிருபா-கனடா), மகேஸ்வரன்(பிரான்ஸ்), குககுமாரராசா(குகா), பிரபாகரன் (பிரபா) ஆகியோரின் அருமை பெறாமகளும், குணராஜன்(ரஞ்சன்,கனடா), பிரியசாந்தா ஆகியோரின் மருமகளும், கஜானி, யாழினி, பிரணவன், சுரேஸ், ரமேஸ், பிரியா வித்தியா ஆகியோரின் மச்சாளும், மலரவன், துஷானி, பிரவீன், அட்சரா, அஷானா, ஆதித்தன், பவகர்னி, லட்சியன, ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக வேண்டிநிற்குமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்
குடும்பத்தினர்

மேலதிக தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| சித்தப்பா - கிருபா - கனடா | 001 4166612968 |
| மாமா - ரஞ்சன் - கனடா | 001 4166188540<br>001 4166718830 |
| மச்சான் - சுரேஸ் - கனடா | 001 4168778826 |
| சித்தப்பா - மகேஸ் - பிரான்ஸ் | 0033 130750703 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தவர் இறப்பது நிரந்தரமானது

உருத்திரபுரத்தில் உவகையாய் வாழ்ந்த கணேசலிங்கமெனும் கமத்தொழிற் போதனாசிரியர் இயற்கையாகவே கவிதை வளம் கொண்ட சீரியலாளன் சிறந்த பொதுச் சேவையுடன் எடுத்த வேலையை இனிதே முடிப்பவர். எல்லோரிடத்திலும் அன்பு கொண்டவர் தன்னை போன்றெ சகல மக்களையும் தொண்டு செய்யவே இயல்பாய்ப் பழக்கி நாட்டின் மத்தியிலே நல்லதோர் நூலகம் ஆக்கி அனைவரின் உதவியும் பெற்று நூலகராகவும் இராக்காவலாளியாகவும் அரும்பணியாற்றி அங்குள்ளோர்க்கு உதவினார். பெற்றோரும் மற்றோரும் சேர்ந்துமே இவருக்குக் கலாவதி என்னும் கவினுடை மங்கையை இல்லாள் ஆக்கி இலங்கிடச் செய்தனர். இவர்தம் அன்பின் இறையருள் தன்னால் யதார்த்திகா, கவியார்த்திகா, பிரார்த்தன், நிரார்த்தன் என்றுமே நான்கு பிள்ளைகள் பிறந்தனர்.

இவர்கள் எல்லோரும் எவ்வித குறையும் இல்லாது வளர்ந்து கல்வி கற்றனர் பெற்றோர் தமக்குப் பெருமை சேர்த்தனர் கவியார்த்திகா என்னும் இரண்டாவது பிள்ளை சுட்டிப் பிள்ளையெனச் சொல்லும் வகையில் தனித்துவமாகச் சீரிய சொற்கள் பேசி நாட்டின் சிறப்போடு வாழ்ந்தார். சரியெனப்பட்டதை யாருக்கும் அஞ்சாது சொல்லியே பலரது பாராட்டைப் பெற்றார் எதைக்காணும்போதெல்லாம் அன்பொழுகு முகத்தினால் வரவேற்றுபசரிப்பதில் வண்ணன்மை மிக்கவர் நாட்டில் நடந்த இனவழிப்பு யுத்தம் தான் பிறந்தது. வளர்ந்த பெருமைசேர் நாட்டை விட்டுமே அகதியாய் ஓட வைத்தது. இவரும் அவரது குடும்பத்தாரும் எங்கே போகின்றோம் என்றே தெரியாது வீட்டுப்பொருட்களை அங்கேயே விட்டுக் கையிலே கிடைத்ததை எடுத்துக்கொண்டு எங்கே போகின்றொம் என்று தெரியாது. படித்த படிப்பையும் இடையிலேவிட்டு திரும்பி வருவோம் என்ற சிந்தையிலே அறிந்தவர் அறியாதவர் வீடுகள் தன்னிலே தங்கி இருந்து பங்கரில் உறங்கி எழுந்திடும் போது குண்டு துரத்தவே நாளுக்கொரு இடம் தேடியே சென்று உண்ண உணவும் படுக்கபாயும் உடுக்க உடையும் இல்லாத நிலையில் பங்கர் வாழ்க்கையே பாதுகாப்பு என்று செல் அடிக்கும் விமானக் குண்டுக்கும் பயந்து பயந்து இருந்த இடங்கள் மாறி மாறி ஓடியே சென்றனர் ஓய்வோ உறக்கமோ இல்லாதிருந்தனர். கையில் இருந்த பணம் முடியமட்டும் உணவு கிடைத்தது உருசி மறந்தோம் மாதம் கணக்காய் மக்களோடு மக்களாய் ஓடினோம் ஓடினோம் உயிரைக் காப்பாற்ற திரும்பி வீடு வருவோம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை எம்மை விட்டுப்போனது என்றோவொருநாள் இறுதி இடமாக வலைஞர் மடமெனும் கடற்கரைப் பக்கமாய் மணல்மேடு தன்னில் இதுதான் பாதுகாப்பு வலயம் என்று அரசு அறிவித்ததை நம்பியே நாமும் பங்கர் அமைத்து அதிலே தங்கினோம். நன்னீர் என்பது கிடைப்பது அரிது. குண்டு மழையோ மக்களை வாட்டியது கண்முன்னாலே இறந்தவர் தொகையோ அனெகமாகும் அங்கம் இழந்தோர் கட்டிட மருந்தில்லை. இந்த நிலையில் உயிர் பிழைக்க என்று படையினர் பக்கம் கடைசி நாளில் சென்றிட எண்ணினோம். இப்படி நாமும் எண்ணிய நாளிற் கவலை தெரியாத கவியார்த்திகா அவர்களின் உயிரை உயிரைபறிக்க எண்ணிய காலன் இறுதி நாளை எண்ணி முடித்து சுவக்குக் குண்டாய் வந்துமே உயிரைப் பறித்துமே சென்றான். பலர் முன்னிலையில் தந்தை, தாயார், தம்பி, அக்கா, உற்றார், உறவினர் அனைவரும் அழுதிட அகால மரணம் அடைந்த தம் புதல்வியை நேரிலே கண்டு நினைவது இழந்து குண்டு மழையின் இடையிலே அனைவரும் மனதினைக் கல்லாக்கிச் செல்ல வேண்டிய கடன்களைச் செய்து அனைவரும் ஒன்றாய்ப் பிறந்தவர் இறப்பது நிச்சயம் என்ற உண்மையை விதி என்ற ஒன்றைச் சாட்டாக வைத்து மனதைத் திடமாக்கிக் பேச எழாது இவர்தம் ஆத்மா சாந்தி பெறுகவென வேண்டுதல் செய்து ஆண்டவன் துணைதான் நிச்சயமானது என்றே எண்ணி அவரது ஆத்மா சாந்தியடைய முடிந்த அளவு அமைதியாயினர். அதுபோல் அவர்கள் உறவுகள் வாழ்ந்த பூமிப்பந்தின் பல்வெறு நாட்டிலும் இவர்தம் ஆத்மா சாந்தி பெறுகவென அமைதி அடைநடதனர். மனதை ஆற்றினர். இலங்கையிற் தமிழராய்ப் பிறந்தது தவிர வேறொன்றும் செய்யாத இளைஞர்கள் இழப்பு உலகினர் மனதினை உருக்கிடச் செய்த உணர்ச்சித் தமிழன் உள்ள நாடு இலங்கைதான் என்பதை நினைத்து நாமும் சாந்தி சாந்தி என்றே கூறி இவர்தம் துயரினிற் பற்கு கொண்டு பகிர்ந்து கொள்வோம். நன்றி நன்றி நன்றி வணக்கம்.

கா. நாகலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமர தீபம்

யாருக்காவது
அமிலம் அருந்திய
அனுபவம் உண்டா?
எப்போதாவது நீங்கள்
மரணத்தை
மடியில் வைத்து பார்த்தீர்களா..??
எறிகணையில்
எரிந்த
அப்பாவைப்பார்த்து
அலறி ஓடி
அம்மாவின் சடலத்தில்
தடக்கி விழுந்த
மழலையின்
முகத்தைக் கண்டவர் உண்டா?
பசிக்காக அழுத
பிள்ளையின்
வாயைக்
சன்னங்கள் சாப்பிட்ட
சம்பவம் தெரியுமா..???
அம்மாவும்.. அப்பாவும்..
சிதறிப்போக– ஒரு
குழந்தையை
இன்னொரு குழந்தையை தூக்கி
அழ வேண்டாம் என
கண்ணீரை துடைத்தது
எந்த கண்களாவது தாங்குமா..?
காயப்பட்டு
காப்பாற்ற முடடியாதவர்
ஈக்களுக்கு இரையானதை
எப்படிச் சொல்ல!..
அழுகிய பிணங்கள் நடுவில்
அடையாளம் காண
கதறியவர் கதை அறிந்தீரா..?
சொல்லி அழ முடியாத
சோகம் சுமந்தவர்
முள்ளி வாய்க்கால் வரை
வாழ்ந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது
அழகிய காலம்
என்றெல்லாம் எழுத முடியாது
இதய நாளங்கள்
நார்..நாராய் கிழிந்த
இலையுதிர் காலம்..– பசித்த
இரைலப்பைகள்
இடியை நிரப்பிய நிமிடங்கள்
கஞ்சிக்காக கையேந்தி
வலைஞர் மடத்தில்
வரிசையாய் நின்றவர்
எறிகணையில் கருகிய கணம்
முகங்கள் முழுவதும்
குருதிக் கொப்பளங்கள்
சதை பிண்டங்களை
ஒட்டு மொத்தமாய்
கரைந்த அந்திமப்பொழுது
காலைகள் ஒவ்வொன்றும்
பிணங்களைப் பிரசவித்த நொடி
மூச்சு நின்ற தாயின்
முலை பருகிய சிசுவின் பசித்த முகம்
அழுது.. அழுது..
அநாதைகளான போது
தொழுகைக்கு கூட தெய்வம்
தொலைந்த நெரிசல்
அவலங்கள் மட்டும் எஞ்சியபடி
ஆதரவற்ற தமிழினம்
மாத்தளனும் ...
வலைஞர் மடமும்..
முள்ளிவாய்க்காலுமாக
உயிர்கள் தலைகிழாகத் தொங்கிய
தோரண வேளை
அதை எழுத
சொற்களுக்கு சோகம்
அவனியில் எவனும் – எனி எவராயினும்
அனுபவிக்காத
ரணங்களின் பிரலயம்
அந்த நாள் ஒன்றில்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசனும் ... கலாவும்
பூவுக்குள்
தவமாய் ... தவமிருந்து
பூப்பித்த
கவினாவும் அவள் சித்தப்பா சிவாவும்
எறிகணையால் உயிர் இழந்த நேரம்...

சின்ன.. சின்ன பூவாய்
சித்திர அழகியாய்
தேன் குழைத்த திரவமாய்
மொழியினித்த
மழலையாய் – எங்கள் கவினா
கவினா...
குழந்தையல்ல அவள்
குமாராலய தீபம்
கவினா
பிள்ளையல்ல அவள்
பிறவிப் பலன்
கவினா
குமரியல்ல அவள்
குடும்ப விளக்கு
ஏற்றி ஏற்றி வெளிச்சம் பரவ முன்
அணைந்த
அமர தீபம்

மலர்ச் சோலையில்
நீயே சிரிப்பூ
உன்னோடு இதழ் விரித்த
ஜதாவும்
பிரார்த்தனும்
நிரார்த்தனும்
கண்ணீரில் கழுவிய
முகங்களுடன்

நெடுந்தீவின்
நேர்வாளர்
கந்தையாவும்
பொன்னம்மாவும்
பெற்ற பேருகளில்
கணேசலிங்கமும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தராவுடன் – சிவா
கிருபா.. கருணா
குகா.. பிரபா
எனப் புலர்ந்த புன்னகையில்
புவனேந்திர ராசா
"புட்போல்" சிவா
இவன் முகவரி
மைதானத்தில்
பந்தை முந்தும் வியூகம்
நடுநிலையாளன்
நல்ல மனிதன்
நாடியில் குறும்தாடியுடன்
சிரிப்புக்கு குடியிருக்கும்
சிவா ... நெறுப்புக்குள்
எம்மை இறுத்தி விட்டு
நெடுந்தூரம் ஏன் சென்றாய்
வினையமான
விளையாட்டு அதிகாரியை

இழந்திருக்கின்றது
கிளிநொச்சி
உருத்திரபுரத்தில்
உன்னால் உதித்த
உதைப்பந்தாட்ட கால்களும்
உன் பாதம் பட்ட
விளையாட்டு திடலும்
வெறுமயாய் – எம்
மனங்களை போல

உன் துணை
கோனேசும்–நீ
அன்பால் நிறைத்து
அழைப்பில் வளர்த்த
ரதீசியா ...
ரதீபன்..
ரதீபா ..
கீர்தணாவும்
ஆற்றுப்படுத்த
ஆரும்மற்ற நிலையில்
எப்படி முடிந்தது – உன்னால்
எம்மை இழக்க..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமாய்
வடிவமைத்த
வாழ்வாய்
திண்ணமாய்
திளைத்திருந்த
தினங்களை
என்னவாய் எறித்தான்
ஊரில் .. உறவில்
கிளை விரித்து

கூடு கட்டி
குதுகலமளித்து
சிரித்திருந்த எம்மை
எறித்து விட்டுச் சாம்பலாய்
எஞ்சியது
கண்ணீரில் உறைந்த
கவலைகள் தான்



அழகாய்
அடைகாத்து
இறைக்குள்
இட்டு வைத்து
பொத்தி .. பொத்திக் காத்த
பொம்முக்குட்டி
கவினாவுக்கு
காகிதத்தில்
எழுத்து மழலையா ?
எம்மால் முடிய வில்லை ..
ஒரு கவிதைக்கு
இன்னொரு கவிதை இயலவில்லை..

கருவறையில் இருந்து
எழுந்தருளிகள்
எங்கு .. சென்றனர்
கோபுரங்களை சாய்த்து விட்டு
குதுகலிக்க எப்படி முடியும்
தெய்வ தரிசனத்தை தேடி
அழுகைகளின் அணி வகுப்பு
மாறிக்கொண்டிருக்கும் காலங்கள்
என்றும் எம் மனதில்
மாறாத உங்கள் முகங்களின் கோலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✍ என்றும் என் நெஞ்சகலாக் கண்ணே!..

என்றும் என் நெஞ்சகலா கண்ணே
என் கண்ணே மணியே
என் மனதில் மையல் கொண்ட
சோதரியே
அன்புக்காதலியே
உன்னை பாமாலை புன்னகையால்
அணைத்து நான் முடிக்கவா
சொல்லம்மா என் இனியவளே
சோகமெலாம் துடையம்மா
என் இதயச் செல்வமே

கற்றோரும் மற்றோரும் களித்திடும்
காவிரியே
சுற்றமெல்லாம் சுகந்தம் தரும்
சுடர் ஞான திபமே

என் கலைக் கவினமுதே
சாந்தம் தரும் மனமே
சாரளம் என் மாருதமே
கவினழகே
ஊற்றின் ஒளி வெள்ளமே
அன்பின் அபிமானியே.



சர்வசக்தி அபிராமியே
ஞானம் பகரும் ஞாளம் புகழும்
புனித பூ மலரே
என் கருணை கடலே
வெற்றிக்கனியே
வீறு நடையொன்று போடமாட்டாயோ
அம்மா
தரிசனம் காட்டாயோ என் செல்வமே

பூத்திடுவாய் புது மலராய்
பார்த்திடுவாய் இப் பாரிதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றிடுவாய் நற் செய்தி
சேர்திடுவாய் அம்மா முழு உலகை
நித்தம் நிகழ்ந்திடும் யுத்தம் கலந்திட
புத்தம் புதிதாய் சிந்தை மலர்ந்திட
சத்திய இலட்சியம் சாதனை ஏற்றிட
சற்றுமோ சோர்ந்திட – என் சோதரியடி

துக்கத்தை யார் தந்தார் துடைத்தெரிய
மாட்டாயோ என்றும் என் குறும்பே என் மாமருந்தே
என் வாழ்வில் ஒளியே உன்னை
பிரித்திட்ட வாழ்வே வெறும்
போலியே என் அம்மா ஏங்கி தவிக்க விட்டாய்

யாரம்மா ஏணியாய் உன்னை தூக்கி விட்டார்
பாரம்மா எங்கள் துயர்
வாரும் அம்மா எங்களுடன்
தாரும் அம்மா நற்செய்தி பல
புது மலராய் பூங்காவன புத்துயிர் பெற்றிடாயோ
என் செல்வமே
ஓடி வாராயோ ஆறுதல் தாராயோ ஆண்டு பல
காத்திருப்பேன்

சகோதரர்கள்
யதா பிரார்த்தன் நிதன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணையில் கரைந்த கவி[னா]தை...

நெருப்பு வாசல்களில்
தலைகீழ் தோரணம்
எறிகணைகளின்
ஒலிபரப்பில் ...
காதடைக்கும் மரணங்களின் செய்தி..
உன்னை பற்றியதும்
அப்படியே ..இல்லை .. இல்லை
அது நிஜமற்றதாகவே ..

என்
சிரிப்பை மறந்து நாளாயிற்று
முகில் கலைந்த பொழுதாய் முகம்

மயில் ஏறும் முருகன்
மதுரையில் மீனாட்சி ..
திருக்கடவூர் அபிராமி ..
இவைகளின் கூட்டாய்
கணேசன் பெற்ற
திருஞான சம்மந்தர் நீ

பாடி திரிந்த எங்கள்
பட்டாம் பூச்சியின்
சிறகெரித்தவர் யார்..?
பொய்கையில் பூந்த எம்
பொம்முக்குட்டியை
பெசுபரசில் பொசிக்கியவர் யார்??

பிட்டுக்கு மண் சுமந்த சிவனும் .. தேவியும்
சேமித்த சின்ன தேவதை
காணமால் போன கதை
காற்றில் வந்ததே
" யாவும் கற்பனை" யா ..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலராகும் முன்னமே
மாலைக்குள் சருகானதா?
"கவினா" எனும்
"கவிஞர்" எழுதிய கவிதை..
சாத்தியமில்லை..

உன்னோடு துணையாக
சித்தப்பா சிவாவும் வந்தாராம்
அதுவும் பொய் தானே ..

வீடுமின்றி
விறகோடு எறியும்
சுடலையும் இன்றி
அழுது தீர்க்க
அயலும் இன்றி
அநாதை பிணங்களின்
அலைவரிசையில் .. எங்கள்
அம்பிகைக்கு
அபிஷேகம் செய்ததாய்
அறிந்தேன் அது
நிஜமற்றதாய் நிடிக்கும்

ஊரமுதாலே
உடைந்து போகும்
உன் அப்பாவை
நா.. ன் ..

சந்திக்கும் வரை



அ.பிரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கார பூ வனமே


ஆசை சித்தப்பா எனும்
அமுத வார்த்தைகளால்
இன்ப தேன் பொங்கும் இனிய நற் புன்னகையாள்
என்னவென்று எமை அழைக்கும் தொலைபேசி வார்த்தைகளால்
என் மகளே கவினாவே ஏகாந்தம் நாம் அடைந்தோம்
வந்திடுவீர் எனும் செய்திக்காய் காத்திருந்தோம்
சிந்தையிலே வீழ்ந்த பேரிடியாய் நாம் சரிந்தோம்
இந்த நிலையாகும்மென இதயத்தில் எண்ண வில்லை
வெந்து தினம் ஏங்குகின்றோம் வேதனையால் சாகுகின்றோம்
செந்தமிழே எங்கள் சிங்கார பூ வனமே
தந்தோம் பூபாதம் அதில்
கண்ணீரின் அஞ்சலிகள்

சித்தப்பாமார்கள்
ஆசை சித்தப்பா குடும்பத்தினர்
கிருபா பவானி துசானி மறைவன்

## உள்ளம் கொதிக்குதடி

ஓடி வந்து முத்தம் எல்லாம் தந்திடுவாய்
பாடி வந்து பகிடி எல்லாம் சிந்திடுவாய்
தேடி வந்து தேன் வார்த்தை தந்திடுவாய் — எமை
நாடி வந்து நற்பண்புகள் செய்திடுவாய்

சிட்டாக சிறகடித்து காட்சி தந்தாய்
சிரிப்பாலே மயக்கி எமை சிரிக்க வைத்தாய்
எட்டாத தூரமது ஓடி விட்டாய்
எண்ணத்தில் மண்ணை வாரி மூடிவிட்டாய்
பட்டே எம் பரிமளமே பதும் கொடியே
பார்வையிலே பாசத்தை பொழிந்தவளே
கட்டான கரும்பே கனி மொழியே
கவினாவே வாரிமுத்தம் தந்திடாயோ
வட்ட பெரு நிலாவே வண்ண பூவே
வாரியெம்மை அணைத்து முத்தம் தந்திடாயோ
பட்ட மரம் போலானோம் பெம்மு குட்டி
பசும் தளிரே ஏன் போனாய் எமை விட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டதெல்லாம் பொன்னாச்சு
தோகை எல்லாம் உன்னால்
சிட்டே என் செல்லக்குட்டி
ஓடி வாராய்
தொட்டே உன் பாதம் அதில்
பாக்கல் கூடி
இட்டோன் அக் கொடியவர்கள்
அழிக வென்று அரங்கள் பாடி

உன்னுயிர் கலந்த பாச உறவுகள்

## குதுகலமே போனதடி

குட்டி என அழைத்து குதுகழமாய் பேசிடுவாய்
சிட்டு போல் எம் கண்ணில் சிறகடித்துப் பறந்தவளே
பட்டுபோல் மேனி பளபளக்கும் உன் வதனம் - எம்
கட்டுக்கடங்காது கலகலப்பாய் ஓடிடுவாய்



பட்ட துயர் கடந்து வந்திடலாம் என்றிருந்தோம்
துட்டர்களால் வந்த இடி வார்த்தைகளால் முடியாது
எட்டத்தே சென்றீரே ஏங்குதடி என் மனசு
கட்டியணைத்திடவே தவிக்குதடி எம் மனசு
சுட்டி உனை போல் சுதந்திரமாய் பறந்து வரும்
சிட்டுக்களும் இல்லையடி
சித்திரமே என்ன செய்வோம்
பொட்டு வைப்பாய் பூ வைப்பாய் பூசை தினம் செய்திடுவாய்
சட்டென்று போய் மறைந்தாய் சாகுதடி எங்கள் உள்ளம்
தொட்டு தன் பாதம் அதில் சொட்டுகின்றோம் கண்ணீரை

குட்டிச்சித்தப்பா குடும்பத்தினர்
பிரான்ஸ் கவிதா இலட்சியன்
(உருத்திரபுரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தம் தொலைந்ததடி

அன்புச் சித்தபாப்
என்றாலே உளம்மலரும்
இன்ப தேன் பாயும் இதயத்துள்
சுகம் துளிர்க்கும்
துன்பத்தை தந்தவர்கள் துளாகிச் சிதறிடுவார்
வன் செயலைலச் செய்தவர்கள்
வாழ்விழந்து போவார்கள்
நன்றிங்கே வந்திடுவீர் என நாங்கள் காத்திருந்தோம்
வான் வழியே வந்த தொரு இடி யோசை கேட்டிழந்தோம்
தேன் மகளே – கவின் மகளே
கண்ணுறக்கமில்லையடி
ஏன் மகளே எமை பறிந்தாய்
எண்ணமெல்லாம் கலைந்ததடி
உன் அடியில் அன்பு அனால் கண்ணீரின் கோலமடி

(பிரான்ஸ்) அன்புச் சித்தப்பா பவாச்சித்தி பிரவீன் அர்ச்சனா அகானா.

# சோகத்ததில் மூழ்கும் சொந்தங்கள்

சொக்கா சித்தப்பா சோக்காய் அழைத்திடுவாய்
பக்கவாய் நின்று பகிழவிட்டு மறைந்திடுவாய்
பக்கத்தில் நின்று பார்த்தெடுத்து வந்ததேனே
தூக்கத்தில் முழியும்என துளியும் நான் என்ன வில்லை

பக்கத்தில் வந்திருந்து பாசம் பொழிந்தாயே
ஏக்கத்தில் எமை விட்டு நீழ் தூக்கத்தில் ஆழ்ந்தாயோ
ஆக்கத்தை தந்தவளே ஆயிரம் பிறை நிலவே
தாக்கத்தை தந்தெமக்கு தரணி விட்டு போனதேயே

தூக்கத்தில் கூட நின்மதிகள் இல்லையடி
தூண்டாமணி விளக்கே கவி மணியே வந்திடம்மா
ஏக்கத்தில் வாழும் உன் சொந்தங்களை பாரும்மா



உன் நினைவில்
குகா வித்யா ஆதித்தன்
பவகரணி கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தப்பா சித்திமார் சிந்தும் கண்ணீர்

சித்துப்பா மார் எல்லாம்
சிந்தை வெந்து வாடுகின்றோம்
சித்துப்பா என்று சிறப்பாய் நீ அழைக்கும்
சித்துப்பா (பெரிய) வோடு
துணையாகிப் போனாயோ

சிட்டுப் போல் என்றும் சிறகடித்த
கவின் மணியே கண் மணியே
பட்டுப் போல் மேனி கொண்ட
எங்கள் பசும் கொடியே
எட்டப் போய் விட்டாயே
ஏனம்மா எமை விட்டு
சுட்டித்தனங்களுடன்
சுறுசுறுப்பாய் சுழன்றடித்த
வட்ட பெரு நிலாவே
வலம் வந்த பம்பரமே
சுட்டுப் பொசுக்கியவர்
சுடுகாடு மிக விரைவில்
கெட்டிதனமாக எங்கள்
குலக்கொழுந்தே
தொட்டுப்பணிந்தோம்
உம் பும்பாதம் தனில் என்றும்



உன் நினைவில்
ஆசை சித்தப்பா குடும்பத்தினர்.
அன்பு சித்தப்பா குடும்பத்தினர்.
சொக்காச் சித்தப்பா குடும்பத்தினர்.
குட்டிச் சித்தப்பா குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பப்பா அப்பம்மா உருகியழும் துயரம்

அனு தினம் உன் நினைவில்
எம் உயிரும் கருகுதடி
கவினு என அழைத்து
அன்பாக சோறூட்டி
கண்மணியே உனை வளர்த்தோம்
கதைகள் பல சொல்லி வந்தோம்

புண்ணாகி நெஞ்சம்
புழுவாகத் துடிக்குதடி
பெண்ணே எம் பேரே
என்னே இக் கொடுமை
உன்னைப் பிரிந்தது
எப்படி நாம் வாழ்வது
கண்ணே கவினே - உம்
காலடியில் கவிதை மலர்
பெண்ணே நாம் தூவி விட்டோம்
பசும் தாரகையே வாராயோ



குட்டிப்பிள்ளை கந்தையா
கந்தையா பொன்னம்மா
உருத்திரபுரம்

## ஆசை அத்தை குடும்பத்தின் சோக கீதம்

குறும்பாலே எமை குதுகழிக்க வைத்திட்ட
அரும்பே எம் ஆருயிரே ஆற முடியவில்லை
கரும்பே எம் கற்பனையே கற்கண்டே கவினாவே
இரும்போ உன் மனது ஏனம்மா எமை பிரிந்தாய்

வருவாய் என உந்தன் ஆசையத்தை காத்திருந்தேன்
திருவாய் மலர்ந்து சிரிப்பாய் என இருந்தேன்
பெரும் போர் சூழ்ந்து போரிடியில் முடியுமென
அரும்பே நாம் எண்ண வில்லை ஆறிடவும் முடியவில்லை

பாசம் பொழிந்தோம் - உம்
பாதத்தில் பூச் சொரிந்தோம்
வாசம் நிறை மல்லிகையே மருமகளே
வாராயோ எங்கள் இல்லம்

உன் நினைவில்
ஆசை அத்தை மாமா
(கனடா) சுரேஸ் ரமேஸ் பிரியா வித்யா
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அம்மாவின் சோக அலை

அன்பாலே அரவணைத்து
அணைத்தும் செய்தேன்
இன்பமுடன் வாழ்வதற்கு
அமையும் என்று என்னுயிரை தந்தேனே
என் கிளியே
ஏனம்மா எனை மறந்து
போனாயம்மா

உன்னை போல கனிவான பேத்தி தன்னை
என் வாழ்வில் காண்பேனம்மா
அன்போடு எனை பார்ப்பாய்
என்றிருந்தேன்
நானிருக்க நீ யோடி போனதேனோ
உன்னிதழில் புன்னகையால்
பூரித்தேனே
என் உயிரே உள்ளமெல்லாம்
வேகுதம்மா

கவின் கவனம் கவனம் சொல்லி
கப்பலிலே நான் ஏறி வந்து விட்டேன்
பூவின் மணம் வீசும் எந்தன் புண்ணகையே
சாவின் பிடி உனை அணைத்து போனதேனோ
நோவிதனை தாங்கிடவே முடியவில்லை
நான் தினம் வெந்து மனம் சாகின்றேனே
பாவினிலே உனை பாடும் பாவியானேன்
பசுங்கிளி நீ வந்து பேசிடவா

அம்மம்மா
சாம்பசிவம் ராஜேஸ்வரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவினா..
கவினா என்றால்
யாரைப் போல
என்று கூற – இங்கு
யாருமே இல்லை

கவினா என்றால்
அவள் – " கவினா" தான்..!
கவினா நீ
தனித்துவமானவள்

களிப்பூட்டும் நாதம்
உன் சிரிப்பலை
இன்று
சிரிக்க மறந்து
நின்றது– உன் வீடு

காண்போரை எல்லாம்
கலகலத்து இழுக்கும்
உன் வசிகரப் பேச்சு
இன்று
காற்றோடு கலந்து
வருடம் ஒன்றாச்சு

இப்போது தான்
அந்த கொட்ட செய்தி
கேட்டது போல்
பதைத்து நிற்கின்றது
நெஞ்சம்

கண்மூடி திறப்பதற்குள்– நீ
காணாமல் போன செய்தி
நடந்தது என்ன வென்று
அறியும் முன்பே – நீ
அறிவிழந்து துவண்ட செய்தி

உயிர் பிரிந்த கனத்திலும்
உன் வதனம்
உயிராய் சிரித்த செய்தி

கார்த்திகை பூ வென்று
கருகி வீழ்ந்த செய்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கணமே
கேட்டது போல்
பதைக்கிறது என் நெஞ்சம்

எங்கு இனி காண்போம்
எப்படி மறப்போம் ...?

காலங்கள் போனாலும்
கலையாதே உன் நினைவு ..

உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகின்றேன்.

தம்பியையா தாத்தா குடும்பத்தாரும்
நிமலி குடும்பத்தாரும்.

## ஆத்மா சாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்

விவசாய திணைக்களத்தின் தோழனே சக ஊழியனே
உம் இழப்பு வலியும் குடும்ப சோகமும்
உமக்கு மட்டும் அல்ல – எம் திணைக்களமே
கண் கலங்கி நிற்கின்றது

உம் மகளின் பண்பும் பணிவும் திறமையும்
அன்பும் பாசமும் வந்தோரை வரவேற்கும் பண்பும்
கல்வியிலே பெற்ற திறமைகளும் பாராட்டும்
கதி கலக்க வைக்கின்றது



படைத்தவன் தான் காதல் கொண்டு
பறித்தானே பாதியிலே
பதறுகின்றோம் தவிக்கின்றோம்
பரிதவித்து நிற்கின்றோம்

நம்பவே முடியவில்லை நம்ப தான் ஆக வேண்டும்
மரணத்தை வென்றிட தான் மனிதரால் முடிகிறதா?
நேற்றிருந்தார் இன்றில்லை இன்றிருந்தால் நாளை இல்லை
எழுத விதி தான் அழுதால் தான் வந்திடுமா ?

துயர் ஒழிக துளிக
துயரத்தை தாங்கி கொள்ளல்
ஆண்டவன் சந்நிதியில் – அவள்
ஆனந்தமாய் பள்ளி கொள்வாள்
எமது சக உத்தியோகத்தரின் மகள் கவியார்த்திகாவின் ஆத்மா சாந்தியடை
ஆண்டவனை பிராத்திப்போம்

பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகம்
(விரிவாக்கம்)
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் பிறந்த மாந்தரெல்லாம்
மண்ணிலே மறைகின்ற போதும்
மனிதர் மறவா மகளாக
வாழ்ந்து சென்றீரே


உயிருக்கு கருவாக உறவுக்கு உயிராக
வாழ்வின் வடிவமாக உறவாடிய உம்மை
கொடியவர் தம் ஏவிய எறிகணையால்

நின்னுயிரை பறித்ததை
விதியெனக் கொள்வதோ இறை
சதியெனக் கொள்வதோ..

நம்ப முடியவில்லை மகளே உன்னை
மறக்க தெரியவில்லை...
திறக்கும் படலை நோக்கி
திரும்பவும் விழிகள் பார்க்கும்

அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம் .

திரு க. சுப்பிரமணியம்
மாகாண விவசாய பணிப்பாளர்
(வடக்கு மாகாணம் )
திருகோணமலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணத்தை வெல்ல இங்கு யாருண்டு! மரணத்தை வெல்வதார்?

ஐயோ எனக் கதறி இங்கு யாரும்
அழ வேண்டாம்
மெய்யான விதி இதனை
வெல்வதாய் யாருமில்லை

பொய்யாதோ என எண்ணி
ஏங்குகின்றோம் – ஆனாலும்
மெய்யான விதி இதனை
பொய்யாக்க யார் உண்டு

மரணத்தை மரணிக்க எவராலும் முடியாது
மரணத்தை வென்றிடவும் எவராலும் முடியாது
நேற்றிருந்தார் இன்றில்லை
இன்றிருந்தார் நாளை இல்லை

ஆனாலும் உன் துயரம் ஆறாத துன்பமடா
ஆன போதும் மறந்து விடு
வாழ்வு இன்னும் முடியவில்லை
ஆத்மா சாந்தி கொள்ள ஆண்டவனை
வேண்டிடுவோம்

மாகாண விவிசாய பணிப்பாளர்
(வட) விவசாய திணைக்களம்
திருகோண மலை

## கவினாவின் காலடிக்கு ஓர் காணிக்கை

கவியார்த்திகா
அன்பில் சிறந்தவள் நீ
பண்பில் வளர்ந்தவள் நீ
கல்வியில் சிறந்தவள் நீ
கலைகளில் உயர்ந்தவள் நீ

காலத்தின் கட்டாயத்தால்
குடும்பத்துடன் இடம் பெயர்ந்து
உயிர் காக்கும் இடமாக
வலைஞர் மடம் சென்றடைந்தாய்



பாவம் அறியா பாவை நீ
பரிதாகம் அனுபவித்த குழந்தை நீ
பதுங்கு குழி பழகி போன குழந்தை நீ
பரிதாப பலியானாய் செல் பட்டு நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்த செய்தி கேட்டு துடித்தோம் – அன்று
சொரிகின்றோம் கண்ணீர் ஒராண்டு – இன்று
இறையோடு இருப்பாய் சதா காலம் – என்று
சத்தியம் செய்கின்றோம் அவர் முன்– இன்று
இவரின் பிரிவால் துயரும் பெற்றோர் சகோதரர்கள்
உற்றார் உறவினர்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிந்து நிற்கின்றோம்.

அருள்ஞானம் குடும்பத்தினர்
புலோலி

# கண்ணீரில் கலங்கும் கவித்தாத்தா குடும்பத்தினர்

தொழில் சுமந்து கூத்தாடி கதை சொல்லி
பசும்பால் கறந்து பச்சையாய் தான் பருக்கி
பாசமாய் உன்னோடு மகிழ்ந்திருந்த காலங்கள்
தேசம் கடந்தாலும் எம் நெஞ்சில் வரியுதம்மா
செல்லக் குஞ்சென்று செல்லமாய் அழைத்திடுவோம்
இல்லை நீ இன்று அனுவனுவாய் துடிக்கின்றோம்
சொல்ல வந்த கொடியவர்கள் அழிவார் விரைவினிலே
மல்லிகையே உம் பாதம் கண்ணீர் மலர் அஞ்சலிகள்

தாத்தா குடும்பத்தினர்
ரவீந்திரநாதன் (அதிபர்)
ராசம்மா (மணி)
அமரர். செந்தில் ரவி
பானுசிறி
செந்தில்ரதன்
ராஜசறி
சசிந்திரசிறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருகியெழும் ஆசை மாமா குடும்பத்தினர்

வன்னி மண் விட்டு வந்திடுவாய் நீ என்று
கன்னியென் என் கவின் மணியே
காலமெல்லாம் காத்திருந்தோம்
வந்தவுடன் கனடா வரவழைக்க வேண்டுமென
சிந்தையிலே கற்பனைகள் கட்டி வைத்தோம்– கவினாவே
இந்த நிலை ஆகுமென எள்ளலவும் எண்ண வில்லை
இரும்புக்கரங்கள் உமை இழுக்கும் என நம்பவில்லை
சொந்த மண் விட்டு வர முடியவில்லை உங்களினால்
அந்தமென வலைஞர் மடம் கொலைஞர்மடம் ஆகியதோ
ஆசை என அழைப்பாய் கலகலப்பாய் பேசிடுவாய்
பேசிய வாய் எங்கே பேதலித்து போய் விட்டோம்
சேகக் கொடுமையிலே தேகம் அழித்திட்டாய்
வாசப்பூமலரே எம் மல்லிகையே நீ மலர்வாய்
ஆசையுடன் மாமா அத்தையுடன் மச்சான்மார்
ஓசைதரும் உன் மச்சான் பிரனவனும் கலங்குகின்றான்
பாசமுடன் உன்னை கட்டி தர முத்தம் தர இருந்தோம்
வேசமிது வாழ்க்கை என காட்டி விட்டு போனாயோ .
நேசமுடன் உன் பாதம் கண்ணீர் பூ அஞ்சலிகள்

ஆசை மாமா குடும்பத்தினர்
குணராசன்(ரஞ்சன்)
தட்ஷனேஸ்வரி (செல்வி)
கயா
யாழி
பிரனவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவர பீடை நாசினிகளும் அவற்றினால் கட்டப்படுத்தப்படும் நோய், பீடைகளும்

| இல | கரைசல் | கட்டுப்படுத்தப்படும் நோய், பீடைகள் |
|---|---|---|
| 01 | உள்ளிக் கரைசல் | சிற்றுண்ணி, அழுக்கணவன், இலைஅரிபுழு, பச்சைத்தத்தி |
| 02 | வேப்பம் எண்ணெய்க் கரைசல் | இலைஅரிபுழு |
| 03 | வேப்பம் இலைக் கரைசல் | தண்டுதுளைப்பான், காய்துளைப்பான், சிற்றுண்ணிகள், எறும்புகள் |
| 04 | மாட்டுச் சிறுநீர் | இலைஅரிபுழு |
| 05 | சாம்பர் | சிற்றுண்ணி, அழுக்கணவன், எறும்பு. |
| 06 | நாயுண்ணி இலைக் கலைசல் | தண்டுதுளைப்பான், காய்துளைப்பான், சிற்றுண்ணிகள், எறும்புகள் |
| 07 | வேப்பம் இலைக் கலைசல் | தண்டுதுளைப்பான், காய்துளைப்பான், சிற்றுண்ணிகள், எறும்புகள் |
| 08 | நொச்சி இலைக் கலைசல் | தண்டுதுளைப்பான், காய்துளைப்பான், சிற்றுண்ணிகள், எறும்புகள் |
| 09 | வேப்பம் விதைப் புண்ணாக்கு | வேர்க் கறையான் |
| 10 | புகையிலைச் சாறு | தண்டுதுளைப்பான், காய்துளைப்பான், சிற்றுண்ணிகள், எறும்புகள் |
| 11 | பப்பாளியிலைச் சாறு | சிற்றுண்ணி, அழுக்கணவன், எறும்பு. |
| 12 | பப்பாளிப்பால் | சிற்றுண்ணி, அழுக்கணவன், எறும்பு. |
| 13 | மண்ணெண்ணெய் | அழுக்கணவன், எறும்பு. |
| 14 | சவர்க்காரம் | வெண்முட்டுப் பூச்சி, செதில் பூச்சி |
| 15 | மாட்டுச்சாணம் | இலைஅரிபுழு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமரச் செய்கை பற்றிய விபரங்கள்.

| இல | பயிர் | குழியின் அளவு (ச.மி) | நடுகை இடைவெளி(மீற்) | ஒரு ஏக்கரில் நடக்கூடிய கன்றுகள் | ஒரு வருடத்தில் ஒரு மரத்திலிருந்து பெறக்கூடிய பழங்கள் | 01 கி.கிராமில் உள்ள பழங்களின் எண்ணிக்கை | உற்பத்தி பெறப்படும் மாதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | மாகறுத்தக்கொழும்பான்<br>வெள்ளைக்கொழும்பான்<br>விலாட் அம்பலவி | 90 x 90 x 90 | 10 x 10<br>8 x 8 | 40<br>60<br>40 | 500-800 | 05-07<br>08-10<br>08-10 | மே-யூன்,<br>ஐப்பசி-<br>கார்த்திகை |
| 02 | தேசி | 60 x 60 x 60 | 4 x 4 | 200 | 200-400 | 15-20 | மாசி<br>பங்குனி,ஐப்பசி<br>கார்த்திகை |
| 03 | பலா | 90 x 90 x 90 | 10 x 10 | 40 | 10-15 | 05 | வைகாசி- ஆனி |
| 04 | கொய்யா | 60 x 60 x 60 | 5 x 5 | 160 | 100-200 | 08-12 | தை-<br>பங்குனி,ஆவணி-<br>புரட்டாதி |
| 05 | பப்பாசி | 60 x 60 x 60 | 3 x 3 | 400 | 50-100 | 1-2 | வருடம் பூராகவும் |
| 06 | வாழை | 60 x 60 x 60 | 3 x 3 | 400 | 2 குலை | 12-15 | வருடம் பூராகவும் |
| 07 | மாதுளை | 60 x 60 x 60 | 4 x 4 | 200 | 10-20 | 5-6 | பங்குனி-<br>சித்திரை,ஐப்பசி-<br>கார்த்திகை |
| 08 | தோடை | 60 x 60 x 60 | 4 x 4 | 200 | 50-100 | 5-6 | பங்குனி-<br>சித்திரை,ஐப்பசி-<br>கார்த்திகை |
| 09 | கொடித்தோடை | 60 x 60 x 60 | 4 x 2 | 500 | 150-200 | 10-12 | பங்குனி-<br>சித்திரை,ஐப்பசி-<br>கார்த்திகை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரியல் கட்டுப்பாட்டுமுறை

சிலந்தி, ஆமை, வண்டு, நீலவண்டு, செவிப்பாம்பு, தும்பி, குழவிகள், பறவைகள் என நன்மை அளிப்பவையின் பெருக்கத்தை பேணுதல். இதனால் சூழலில் காணப்படும் தீமை விளைவிக்கும் இயல்புடையவை அழிக்கப்படும்.

## சேதன இரசாயன முறையிலான தாவர பீடை நாசினிகள்

இங்கு தயாரிக்கும் நாசினிகள் முற்றிலும் சூழலுக்கு தீமை பயக்காதவையாகும்.

☆ உள்ளிக் கரைசல்




**தேவையான பொருட்கள்**

வெள்ளைப்பூடு 100 கிராம்
சவர்க்காரம் 10 கிராம்
மரக்கறி எண்ணெய் 2 மேசைக்கரண்டி
நீர் ½ லீற்றர்



**செய்முறை**

வெள்ளைப்பூட்டை நன்கு அரைத்தல்.




அரைத்த சாற்றுடன் 2 கரண்டி மரக்கறி எண்ணெய் 10 கிராம் சவர்க்காரம், ½ லீற்றர் நீர் சேர்த்து 12 மணித்தியாலம் ஊறவிடவும். ஊறிய கரைசலை வடித்து 20 லிற்றர் நீருடன் கலந்து பயிர்களுக்கு தெளிக்கவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **வேப்பம்பருப்புக் கரைசல்**



**தேவையான பொருட்கள்**


வேப்பம்பருப்பு 20 கிராம்
சவர்க்காரத்தூள் 10 கிராம்
நீர் 1 லீற்றர்



**செய்முறை**

வேப்பம்பருப்பை இடித்து மாவாக்கல். நீர், சவர்க்காரம் சேர்த்து 12 மணிநேரம் ஊறவிட்டு வடித்து விசுறல்.

★ **வேப்பம் எண்ணெய்க் கரைசல்**




**தேவையான பொருட்கள்**

வேப்பம் எண்ணெய் 30 மி. லீற்றர்
சவர்க்காரத்தூள் 10 கிராம்

**செய்முறை**

1 லீற்றர் நீரில் இக் கலவையை கரைத்து விசிறல்.

★ **வேப்பம் இலை நீர்க் கரைசல்**



**தேவையான பொருட்கள்**

வேப்பம் இலை 2 கிலோகிராம்
நீர் 5 லிற்றர்

**செய்முறை**

பொன்னிறமாக அவித்தல். 12 மணி நேரம் குளிரவிடுதல். பின் வடித்து சவர்க்காரக் கரைசலுடன் விசுறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகளால் துதிக்கின்றோம்

துன்புற்ற வேளையிலே
துணையாகி வந்தெங்கள்
துயர் பகிர்ந்த அன்பர்களே
நண்பர்களே உயர்வான
உறவுகளே தென்போடு நாம் வாழ
தெரிவித்த வார்த்தைகளால்
இன்றிங்கே வாழ்கின்றோம் இதயத்தால் போற்றுகின்றோம்

அன்போடு வந்து அனுதாபச் செய்தி தந்து
துன்பங்கள் தீர்த்த பாசப் பிறப்புக்களே
தொலைபேசி தந்தி கண்ணீர் அஞ்சலிகள்
காசு பணம் உணவு உடை உதவிக்கரம் தந்தோரே
கரம் கூப்பி
சிரம் தாழ்த்தி
பெரு நன்றிகளால் போற்றுகின்றோம்


தற்காலிக முகவரி
பண்ணை முகாமையாளர்
(மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம்)
முருகனூர் வவுனியா

திரு.திருமதி. கணேசலிங்கம் குடும்பத்தினர்
ஆனந்தம்பண்ணை
உருத்திரபுரம்
கிளிநொச்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org